தமிழ்ச்சிட்டு

குரல் 23
இசை 12



தென்மொழி
இணைப்பு
சிலை (திசம்பர் - 2000)

சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்

மலை!

வானைத் தொட்டு நிற்கின்றாயே மலையே — நீ
வளர்ந்த வகை என்ன வென்றே உரையே!
தூணைப் போல வானக் கூரை தாங்க — உன்னைத்
தூக்கி நிற்க வைத்த வர்கள் யாரோ?

கடலைத் தோண்டிப் போட்ட கல்லு மண்ணோ? — நீ
காற்றடித்துச் சேர்ந்த குவியல் தானோ?
இடம் பெயரா திருந்த விடத்தில் இருப்பாய்! — மேல்
ஏறிப் போகும் மாந்தர் நிலையைப் பொறுப்பாய்!

பறந்து திரியும் முகில்கள் உன்றன் மடியில் — வந்து
படுத்துத் தூங்கும் அழகு நல்ல அழகே!
இறங்கி வழியும் அருவி என்னும் குழந்தை — நீ
ஏந்திப் பெற்ற இன்பக் குழந்தை தானோ?

தேனிருக்கும்; கனியிருக்கும்; உன் மேல்! — நல்ல
தேக்கிருக்கும்; பாக்கிருக்கும்; துள்ளு
மானிருக்கும்; மருந்திருக்கும்; உன்னால் — என்
மனத்திருக்கும் துன்பம் நீங்கும் மலையே!

மழையே ஓடி வா!

பிழைக்கும் உயிர்கள் மகிழவும்,
பூண்டு புற்கள் துளிர்க்கவும்,
அழைக்கின் றேனே உன்னையே
அருள் மழையே ஓடி வா!



வறண்ட ஏரி ஆறெல்லாம்
வழிய, வானி லிருந்துகீழ்
இறங்கி வந்து தேங்கிட
இன்ப மழையே ஓடி வா!

பயிர் விளைந்து குவியவும்,
பாரில் ஒழுங்கு நிலைக்கவும்,
உயிர்கள் தோன்றி வாழவும்
உதவும் மழையே ஓடி வா!

மழையே மழையே ஓடி வா!
மக்கள் இன்பம் நாடி வா!
உழைக்கும் உழவர்க் குதவ வா!
உலகம் செழிக்க ஓடி வா!

— **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் —
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

— பாவலரேறு

குரல் : 23, இசை : 12

தென்மொழி
2031 (திசம்பர் 2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302.
தொலைபேசி எண் : 227 0231

கேள்வியே அறிவின் வாயில்!

உலகம் தட்டையானது — என்று சொன்னதைக் கண்ணை மூடிக் கொண்டு கேட்டுக் கொள்ளாமல் — 'எப்படி' — என்று திருப்பிக் கேட்ட போதுதான் — உலகம் உருண்டையானது என்று உணர முடிந்தது.

வட்டமான அல்லது சதுரமான பொருள் ஒன்றை ஒவ்வொரு கோணத்திலிருந்து பார்க்கிறபோதும், அதன் ஒரு பக்கத்தைத் தான் நம்மால் பார்க்க முடியும்.

எதிர்ப்பக்கமும், பக்கவாட்டுப் பக்கங்களும் நம் கண்களுக்குத் தெரியாமலேதான் இருக்கும்.

அப்படி இருப்பதாலேயே அந்தப் பொருள் ஒருபக்கத்தை மட்டுமே உடையது என்று சொல்லிவிட முடியாது இல்லையா?

அதுபோலவே, ஒரு பொருளின் வளர்ச்சிக்கும் ஒவ்வொரு செயலின் வளர்ச்சிக்கும் காரணங்கள் பலவாக இருக்கின்றன, அதன் தன்மைகள் பல்வேறு வகையில் வேறுபாடு கொண்டுள்ளன.

எனவே, அதன் காரணங்களை அனைத்துக் கோணங்களிலும் அறிந்து கொள்ள அப் பொருளின் அல்லது செயலின் முழுச் சூழல்களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப் பொருள் எப்படி அவ்வாறு உருவானது? அது ஏன் அப்படி உருவாக வேண்டும்? — என்றெல்லாம் முழுமையாய்க் கேட்டுப் பழக வேண்டும்.

அக் கேள்வி அறிவே அப் பொருள் பற்றிய முழு அறிவையும் நமக்குக் கொடுக்க முடியும்.

அதுவே அறிவின் வாயிலை நமக்குத் திறந்து காட்டும்.

எனவே ஒவ்வொரு செயலின் வளர்ச்சியைப் பற்றியும் நமக்குள் கேள்வி எழுப்பிக் கொண்டு விரிவாய் அறிவோம்.

*

மீன்கள்

இயற்கையில் நீர்நிலைகளிலும், ஆறுகளிலும், கடல்களிலும் மீன்கள் கோடிக் கணக்கில் உள்ளன. முதுகெலும்புள்ள மற்ற எல்லா உயிரினங்களையும்விட இவற்றின் எண்ணிக்கை மிகவும் அதிகம். ஒரு நூறு மாத்திரி(செண்டிமீட்டர்) நீளமே உள்ள மிகச் சிறிய மீனிலிருந்து, 15 மாத்திரி (மீட்டர்) நீளமுள்ள திமிங்கிலச் சுறா (Whale Shark) வரை உண்டு. ஆனால் கடலில் வாழும் திமிங்கிலம் மீன் அன்று. அது குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் பாலூட்டி விலங்குகளில் ஒன்று.



சில மீன்கள் நல்ல நீரில் மட்டுமே வாழ முடியும். சில மீன்கள் கடல் நீரில் மட்டும வாழ முடியும். சில மீன்கள் இரண்டிலும் வாழக்கூடும். மீன் ஒரு குளிர் குருதி உயிரி. இதன் உடலின் வெப்ப நிலை சுற்றிலுமுள்ள நீரின் வெப்ப நிலையைப் பொறுத்து மாறும்.

நீரில் வாழ்வதற்கு ஏற்றவாறு மீனின் உடல் அமைந்திருக்கிறது. அதன் உடலில் நடுப்பகுதி பருத்தும், தலைப் பக்கமும் வால் பக்கமும் குவிந்து சிறுத்தும் இருக்கின்றன. இவ்வாறு அதன் உடல் ஓர் ஓடம்போல இருப்பதால் அது நீரைப் பிளந்து கொண்டு வேகமாகச் செல்ல முடிகிறது. பெரும்பாலான மீன்களுக்கு உடலில் செதில்கள் (Scales) உண்டு. செதில்களில் வழவழப்பான பொருள் சுரப்பதால் நீரில் இது எளிதில் நழுவிச் செல்கிறது.

நீரில் நீந்துவதற்கென்று மீன்களுக்குப் பலவகைத் துடுப்புகள் உள்ளன. வால் துடுப்பு முன்னுக்கு உந்தி விரைவாகச் செல்லவும், இடம்வலமாகத் திரும்பவும் பயன்படுகிறது. முதுகுத் துடுப்பும், இரண்டு வயிற்றுத் துடுப்புகளும், வாலுக்குச் சற்றுமுன் கீழுள்ள குதத் துடுப்பும் மீன் தலை கீழாகக் கவிழ்ந்துவிடாமல் ஒரே நிலையில் இருக்க உதவுகின்றன. இரண்டு மார்புத் துடுப்புகள் நீரின் மேலும் கீழும் செல்லப் பயன்படுகின்றன.

மீனின் கழுத்துப் பகுதியில் செவுள்கள்(Gills) உள்ளன. மீன் வாய் வழியாக நீரை உட்கொண்டு வாயை மூடிச் செவுள்கள் வழியாகத் தண்ணீரை வெளிவிடும். அப்போது செவுள்கள் மூலம் நீரில் கரைந்துள்ள உயிர்வளிக் காற்றை எடுத்துக் கொள்கிறது. அரத்தத்திலுள்ள கேடான கரிமவளி தண்ணீரில் கரைந்து வெளியேறுகிறது. இவ்வாறு பெரும்பாலான மீன்கள் செதில்கள் மூலம் உயிர்க்கின்றன. நுரையீரல் மீன் மட்டுமே நுரையீரலால் உயிர்க்கிறது.

பெரும்பாலான மீன்களுக்குச் சிறுநீரகத்திற்குக் கீழே காற்றுப் பைகள் உண்டு. சில மீன்களில் இவை

நுரையீரலாகவும் சில மீன்களில் மிதவைக் கருவியாகவும் பயன்படுகின்றன.

பெரும்பாலான மீன்களுக்கு இரண்டு பெரிய கண்கள் உண்டு. கண்கள் பக்கத்திற்கு ஒன்றாக இருக்கும். ஆனால் இவற்றிற்கு இமைகள் இல்லை. எனவே மீன் தூங்கும்போதும் கண் திறந்திருக்கும். நாக்கு மீன் போன்ற சில வகைத் தட்டையான மீன்களுக்குக் கண்கள் இரண்டும் ஒரே பக்கத்தில் இருக்கும். கடலில் மிக ஆழத்தில் மட்டுமே வாழும் ஆழ்கடல் மீன்களுக்குக் கண்கள் சிறியவை. கடலில் கல்லளை(குகை) போன்ற இருண்ட பகுதிகளில் வாழும் மீன்களுக்குக் கண்களே இல்லை. மீனுக்கு நமக்கிருப்பதுபோல் புறச் செவிகள் இல்லை. ஆனால் தலையினுள் செவி அமைந்திருக்கும். நம்மைப்போல மீன் ஒலியைக் கேட்க முடியாது. ஆனால் நீரில் உண்டாகும் அதிர்ச்சிகளை அது எளிதில் உணரும். மீனின் மூக்குத் துளைகள் மிகச் சிறியவை. ஆனால் அது மணத்தை நன்கு உணர்கிறது. மீனின் வாய் பெரிதாக இருக்கும். சில மீன்களுக்கு வாயில் கூர்மையான பற்கள் உண்டு. இவை உட்புறம் நோக்கி வளைந்திருக்கும். வாயினுள் இருக்கும் இரை தப்பிவிடாமல் இருக்க இவை உதவுகின்றன.

சில மீன்களுக்கு நீரிலுள்ள புழு பூச்சிகளும், சிறிய நீர்ச் செடிகளும் உணவாகும். சில மீன்கள் நிலைத் திணைகளை மட்டுமே தின்னும். பெரிய மீன்கள் சிறிய மீன்களையும் மற்றும் சிறிய புழுக்களையும் உணவாகக் கொள்ளும்.

மீன்களில் ஏறத்தாழ 20,000 வகைகளுக்கு மேல் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கடலின் எல்லா மட்டங்களிலும் இவை வாழ்கின்றன.

சால்மன் இனத்தைச் சேர்ந்த மீன்கள் ஆறுகளில் எங்கோ பிறந்து பிறகு கடலை அடைந்து வாழ்கின்றன. ஆனால் முட்டையிடும் பருவம் வரும் போது மீண்டும் ஆறுகளில் நீரோட்டத்தை எதிர்த்தும், அருவிகளைக் கடந்தும் நூற்றுக் கணக்கான அயிர மாத்திரி(கிலோ மீட்டர்) தொலைவேனும் சென்று தாம் பிறந்த இடத்தையே அடைகின்றன. இது வியப்பாக இருக்கிறதன்றோ? அவை தாம் பிறந்த இடத்திற்குச் சென்று முட்டையிட்டுப் பெரும்பாலும் அங்கேயே இறந்து விடுகின்றன. பின்னர் முட்டையிலிருந்து வரும் குஞ்சுகள் சில ஆண்டுகள் வளர்ச்சியடைந்தபின் கடலுக்கு வந்து விடுகின்றன. இதற்கு நேர்மாறாக, ஆறுகளில் வாழும் மலங்கு(ஈல்) மிகு தொலைவு கடலுக்குள் நீந்திச் சென்று ஏற்ற இடம் பார்த்து முட்டையிடுகின்றது.

மீன்பிடித்தல் சிலருக்குப் பொழுது போக்கு. ஏரிகளிலும் ஆறுகளிலும் உள்ள மீன்களைத் தூண்டில் போட்டுப் பிடிப்பார்கள். தோணிகளிலும் படகுகளிலும் ஏறிக் கடலில் நெடுந் தொலைவு சென்று பெருமளவில் மீன்களைப் பிடித்து வருவதும் உண்டு. உலகில் பல நாடுகளில் மீன்பிடித்தல் முகாமையான தொழிலாகவும் உள்ளது.

காட்டு, சுறா முதலிய மீன்களின் கல்லீரலிலிருந்து ஒருவகை எண்ணெய் எடுக்கிறார்கள். இது மிகவும் சாரமுள்ளது. புரதச் சாரமும், தாதுப் பொருள் சாரமும் மீன் இறைச்சியில் நிறைந்துள்ளன. உலகில் மக்கள் பலருக்கு மீன் உணவாகின்றது. மீன் எலும்புகள், செதில்கள் உரம் தயாரிக்கப் பயன்படுகின்றன.

*

கதிரவக் கோள்கள்

நம்பியின் தந்தை இதுவரை சொன்ன செய்திகளை யெல்லாம் நினைவுபடுத்தி மீண்டும் கூறினார்.

இடையிடையே குழலியும் எழிலும் நம்பியும் நினைவு வைத்திருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளக் கேள்விகள் கேட்டார்.

குழலி மிகவும் ஈடுபாடாக விடை சொன்னதில் நம்பியின் தந்தைக்குப் பெரிதும் மகிழ்ச்சி.

இறுதியாய் நம்பியின் தந்தை தாம் கொண்டு வந்திருந்த கோள்கள் பற்றிய பட்டியலைக் காட்டினார்.

குழலியும், எழிலும் மிகவும் ஆர்வமாய் அதை வாங்கிப் பார்த்தனர்.

கதிரவக் கோள்கள் பற்றிய பட்டியல்

கோள்கள்	கதிரவனிலிருந்து கோடி அ.மா.	விட்டம் கோடி அ.மா.	தன்னைத்தானே சுற்றும் காலம்	தட்பவெப்பநிலை நூற்றளவியில்	எடை நிலம் - 1	கதிரவனைச் சுற்றிவர ஆகிற காலம்
கதிரவன்	—	1,39,200	25 நாள் 9 மணி	6000°	333,43400	—
அறிவன்	5.8	0.485	58 நாள் 14 மணி	350°-170°	0.04	88 நாள்
வெள்ளி	10.8	1210.4	243 நாள்	480°	0.83	225 நாள்
நிலம்	14.95	1275.6	23 மணி 56 நிமையம்	22°	1.00	ஓர் ஆண்டு
செவ்வாய்	22.8	679	24 " 37 "	50°	0.11	ஓர் ஆண்டு 322 நாள்
வியாழன்	77.85	14260	9 " 50 "	150°	318.00	11 " 315 "
காரி	142.5	12000	10 மணி 14 நிமையம்	180°	45.00	29 " 167 "
விண்மம்(யுரேனீசு)	287	5200	24 " (?)	210°	15.00	84 " 6 "
நெடுமம்(நெப்டியூன்)	449.7	4800	22 " (?)	220°	17.00	164 " 288 "
சேண்மம்(புளுட்டோ)	590	300	6 ." 6 மணி	230°(?)	0.06	247 " 255 "

கோள்களுக்குரிய நிலவுகளின் எண்ணிக்கை: அறிவன், வெள்ளி = 0; நிலம் - 1, செவ்வாய் - 2, வியாழன் - 14(?) காரி - 17(?) விண்மம் - 5, நெடுமம் - 2, சேண்மம் - 1

சொல்லடை:

1	2						3
	4		5				
		6		7		8	9
10	11				12		
		13					14
							15
16			17			18	
	19						20

இடமிருந்து வலம்

1. பாட்டாளி வகுப்பின் பொருளியல் கோட்பாடு (5)
4. தவசங்களில் ஒன்று (3) 5. உலகம் (5) 7. விண்மீன் (2)
10. மரக் கரண்டி (4) 12. கடை குறைந்த மகிழ்வு (3) 13. கையெழுத்து (4)
16. மதில் (3) 17. ஊறுகாய் (4) 18. பனை, தென்னை ஆகியவற்றின் ஓர் உறுப்பு (2
19. சீத்தலைச்சாத்தனார் செய்தொழிலால் இப்படி அழைக்கப்பட்டார் (6)

வலமிருந்து இடம்

3. வறுமை (4) 4. பாதை (2) 6. குழிப்புண் (2)
7. உணவில் சுவை சேர்க்கும் கடலின் விளைபொருள் (3) 8. தழும்பு (2)
12. போர் மேல் செல்லும் புறத்திணை (3) 13. பசையால் இணை (3)
14. நீர் நிறைந்த இடம் (3) 15. சண்டை (3) 17. அடிக்குஞ் சவுக்கு (2)
19. ஊழியத்துக்குக் கைமாறு (2) 20. காட்டை இப்படியும் சொல்வதுண்டு (2)

மேலிருந்து கீழ்

1. சோலை (3) 2. பயறு வகைகளுள் ஒன்று (3)
3. நிறையளவை குறிக்கும் ஒருவகைப் புல்லரிசி (3)
5. அழுக்குக் குவியல் (3) 7. உயர்ச்சி (4) 8. சிறுதோணி(4)
9. பழந்தமிழகத்திலிருந்து யவன நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள் (3)
10. பரணி என்றழைக்கப்படும் நாள்மீன் (4) 11. குற்றுவாள் (4)
12. கயிறு (3) 13. தண்டனை வழங்கு (2) 14. ஒருவகை ஏனம் (3)
16. சோழர் இலச்சினை; ஈழப் போராளி (2)

கீழிருந்து மேல்

5. மழையிலும், வெயிலிலும் பாதுகாப்பளிப்பது (2)
7. இலக்கியத்தில் ஒப்பீடு (3) 8. நன்செய் விளைநிலம் (3) 11. ஆற்றின் ஓரம்
13. சமன்மை (5) 17. உழு கருவி (4) 20. ஏறு (2)

காக்கைகளின் அறிவு!

ஒரு காக்கை கரையோர மணல் திடருக்கு மேலே பறந்தது. அது மிகவும் சோர்வுடன் தொல்லைப் பட்டுச் சிறகடித்தது; பசித்திருந்தது போலக் காணப்பட்டது.

திடுமென அது கீழே தரையைக் கூர்ந்து நோட்டமிட்டவாறு காற்றில் மிதந்தது. பிறகு கீழிறங்கி ஆழமற்ற நீரில் கிடந்த கிளிஞ்சில் அருகே தத்திச் சென்றது. கிளிஞ்சிலைக் கொத்திக் கொண்டு அது பறந்து போயிற்று.

தரையிலிருந்து ஏறத்தாழப் பதினைந்து மாத்திரி(மீட்டர்) தூரம் உயரே சென்றதும் கிளிஞ்சிலைக் கீழே போட்டு விட்டு அதன் பின்னே சறுகி இறங்கியது. மணலில் விழுந்த கிளிஞ்சிலில் கீறல்கூட ஏற்படவில்லை.

காக்கை கிளிஞ்சிலை மூன்று முறை கொத்தி மேலிருந்து தரையில் போட்டது.

இந்த உடற்பயிற்சி, பசியால் களைத்த காக்கைக்குச் சோர்வு ஊட்டியது போலும். அது கரையில் சற்று நேரம் அமர்ந்து இளைப்பாறிற்று. பின்பு பல மாத்திரிகள் உயரத்தில் பறந்து சுற்று முற்றும் பார்வை செலுத்தியது, கரையின் கற்பாங்கான இடத்துக்கு மேல் இரண்டொரு வட்டங்கள் இட்டது. பின்பு கிளிஞ்சிலை எடுத்துத் திரும்பியது.

நான்காவது தடவை அது கிளிஞ்சிலைக் கற்கள்மேல் போட்டது. கிளிஞ்சில் கடைசியில் உடைந்தது. காக்கை கீழே பாய்ந்து, தன் வலிய உகிர்களால் கிளிஞ்சில் ஒட்டைத் திறந்து உள்ளிருந்த மெல்லுடலியை ஆர்வத்துடன் கொத்தித் தின்னத் தொடங்கிற்று.

இந்த விளக்கத்தை ஒருவர் எனக்குத் தம் மடலில் எழுதியிருந்தார். காக்கையின் விடாமுயற்சி அவருக்கு வியப்பளித்தது.

நெருக்கடியான சூழல்களில் கை கொடுக்கக் கூடிய பல வழக்கங்களை வாழ்க்கை பல விலங்குகளுக்குக் கற்பித்திருக்கிறது.

சிப்பி பிடிப்பான் என்னும் பறவை சிப்பியை வேறு வகையாகத் திறக்கும். அது சிப்பியை அலகுகளால் இறுகப் பற்றிக் கொண்டு உடையும் வரை அதைக் கல்லில் மோதிக் கொண்டிருக்கும்.

காக்கைகளின் மூளை பெரும்பாலான பறவைகளின் மூளையைக் காட்டிலும் அதிக வளர்ச்சி பெற்றது. எனவே அவற்றைக் கூர்ந்து கவனிப்பவர்கள் சில வேளைகளில் வியப்பான நிகழ்ச்சிகளைக் காண்கிறார்கள்.

சுரங்கப் பொறி இயலாளர் ஒருவர் குறி தவறாமல் சுடப் பழகுவதற்காக ஒவ்வொரு நாளும் காக்கைகளைச் சுடத் தொடங்கினார். அவர் முதல் குண்டு சுட்டதற்கு இரண்டு, மூன்று நாள்களுக்குப் பிறகு காக்கைகள் அவரைக் கண்டதுமே பறந்து ஓடலாயின. அவருடைய துப்பாக்கிக் குண்டு வீச்சு எல்லைக்குச் சிறிது தொலைவு வரை அவை பறந்து போகும்.

காக்கைகள் வழக்கமாக இரை தேட வரும் குப்பைக் கிடங்கின் பக்கத்திலிருந்த சிறு கொட்டடியில்

பதுங்கிக் காத்திருப்பது என்று பொறி இயலாளர் அப்போது முடிவு செய்தார்.

ஆனால் அவர் பதுங்கிப் பதுங்கிக் கொட்டடிக்குள் போவதைக் காக்கைகள் பார்த்துவிட்டன. உடனே அவை மரங்களின் உச்சிகளுக்குப் பறந்து போயின. பொறி இயலாளர் கொட்டடியிலிருந்து வெளியேறிய பின்பே அவை குப்பைக் கிடங்குக்குத் திரும்பின.

மறுநாள் பொறி இயலாளர் ஒரு நண்பருடன் கொட்டடிக்குள் போனார். நண்பர் மறுகணமே வெளியே சென்றுவிட்டார். ஆள் ஒருவன் கொட்டடியிலிருந்து வெளியே போவதைக் காணும் காக்கைகள் குப்பைக்குப் பறந்து வரும் என்று பொறி இயலாளர் உறுதியாக நம்பினார்.

ஆனால் இந்த எளிய தந்திரத்தால் காக்கைகள் ஏமாற வில்லை. பொறி இயலாளர் சலித்துப் போய், காலையுணவு கொள்ள வீட்டுக்குப் போகும் வரை ஒரு காக்கைகூட மரங்கள்மேல் தங்கள் பாதுகாப்பான இடங் களிலிருந்து நகரவே இல்லை.

மாந்தரான தம்மால் மட்டிக் காக்கைகளின் கூட்டத்தை ஏமாற்ற முடியாததை எண்ண அந்த வேட்டைக்காரருக்கு எரிச்சல் மண்டியது.

மறுநாள் அவர் இரண்டு நண்பர்களோடு கொட்டடிக்குள் போய் அவர்களை உடனே திருப்பி அனுப்பிவிட்டார்.

இருவரும் தலை மறைந்ததும் பொறி இயலாளர் சுவர் இடுக்கு வழியே நம்பிக்கை பொங்க நோக்கினார். காக்கைகள் மரங்கள் மேல் பொறுமையாக உட்கார்ந்திருந்தன.

"இவற்றை ஒரு கை பார்க்காமல் விடமாட்டேன்!" என்று உறுதி கொண்டார் பொறி இயலாளர். மறு முறை மூன்று நண்பர்களுடன் கொட்டடிக்கு வந்தார் அவர்.

இந்த முறை அவர் வென்றார். மூன்று நண்பர்களும் கொட்டடியிலிருந்து வெளியேறி முகப்பு வெளியைக் கடந்து சென்றதும் காக்கைகள் குப்பைக்குப் பறந்து வந்தன.

இந்த விளக்கங்களை எழுதிவிட்டு என் வேட்டைக்கார நண்பர், "காக்கைகளால் மூன்றுவரைதான் எண்ண முடியும் என்று முடிவு செய்ய இந்தத் தற்செயலான ஆய்வு இடந்தருகிறது" என்று குறித்திருந்தார்.

இது சரிதானா? காக்கைகள் தங்கள் பகைவரின் தோற்றத்தை நினைவு வைத்திருந்தன என்றும் மற்றவர்களுடன் அவரும் கொட்டடியிலிருந்து வெளியேறுவதற்காகக் காத்திருந்தன என்றும் நினைப்பதே அதிகப் பொருத்தமாய் இருக்கலாம்.

மூன்று நண்பர்களும் கொட்டகையிலிருந்து வெளியேறி நெருங்கிய கூட்டமாகச் சென்றபோது அவர்களுள் ஒருவரை வேட்டைக்காரர் என்று காக்கைகள் தவறாக நினைத்திருக்கலாம்.

பொதுவாகச் சொன்னால், காக்கைகள் மக்களின் முகங்களை நன்றாக நினைவு வைத்துக் கொள்கின்றன. அதிலும் தங்களுக்குத் தீங்கு செய்பவர்களின் முகங்களை அவை எளிதில் மறப்பதில்லை. □

தமிழ் மண்ணின் பழமொழிகள் சில...

- ✳ எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன ?
- ✳ ஓதியமரம் தூணாமோ, ஒட்டாங்கிளிஞ்சல் காசாமோ ?
- ✳ கள்ளிக்கு முள்வேலியும், கழுதைக்குக் கடிவாளமும் வீண்.
- ✳ புளியும் ஓடும்போல் ஒட்டாமல் இருக்கிறது.
- ✳ மங்குங் காலம் மாங்காய்,
  பொங்குங் காலம் புளியங்காய்.
- ✳ மா பழுத்தால் கிளிக்காகும்;
  வேம்பு பழுத்தால் காக்கைக்காகும்.
- ✳ வேம்புக்குப் பல் அழகுறும்,
  வேலுக்குப் பல் இறுகும்.
- ✳ வேம்பும் கரும்பாச்சே,
  வெற்றிலையும் நஞ்சாச்சே.
- ✳ வேலம்பட்டை மேகத்தை
  ஆலம்பட்டை பித்தத்தை அடிக்கும்.
- ✳ புளிய மரத்தில் ஏறியவன்,
  பல் கூசினால் இறங்குவான்.

சொல்லடை: விடை

1 பொ	2 து	வு	டை	மை	லா	ல்	3 இ
ழி	4 வ	ர	5 கு	வ	ல	ய	ம்
ல்	ரை	6 பு	ப்	7 உ	டு	8 வ	9 மி
10 அ	11 க	ப்	பை	ம்	12 து	ள்	ள
டு	ட்	13 ஓ	ப்	ப	ம்	ள	14 கு
ப்	டா	று	ல	ர்	பு	ம்	15 வ
16 பு	ரி	சை	17 க	டி	ப்	18 பா	ளை
லி	19 கூ	ல	வா	ணி	க	ன்	20 கா.

இது வாழ்க்கை!

கட்டும் வீடுகள் புழங்கத்தான்!
கால்களில் செருப்பு தேயத்தான்!
கட்டும், உடுத்தும் ஆடைகளும்
கசங்க, அழுக்குகள் ஆகத்தான்!

நடக்கக் கொள்ளச் சேருந்தாம்
நாலாப் பக்கமும் குப்பைகளே!
நடக்கா திருக்க முடிந்திடுமா?
நடத்தல் தானே வாழ்க்கையடா!

சூடும் பூக்கள் வாடத்தான்!
சூடா திருக்க முடிந்திடுமா?
கூடும் உறவுகள் பிரியத்தான்;
கூடா திருக்க முடிந்திடுமா?

வேலைஎன் றாலே வினைப்பாடுதான்;
வெயர்வை, அசதி, அலுப்புத்தான்!
வேலையொன் றின்றி முடிந்திடுமா?
வேலை த்தானே வாழ்க்கையடா!

நாலு காசுகள் செலவிடத்தான்;
நல்லது கெட்டது பார்த்திடத்தான்!
மேலும் கீழும் புரள்வதுதான்;
வினைகள் தாமே வாழ்க்கையடா!

மணங்கொள் வாழ்க்கை என்பதெல்லாம்
வரவும் செலவும் சேர்ந்ததுதான்!
குணங்கள், ஏற்ற இறக்கங்கள்
கொண்டது தானே வாழ்க்கையடா!

*

பாவலர்

இளஞ்சித்திரன்

தாய்மொழி கரும்பு தமிழா விரும்பு

—புதுவை தமிழ்நெஞ்சன்—

பள்ளி சென்று திரும்பும் போது
பாதை ஓரம் செல்லு — இடப்புறப்
பாதை ஓரம் செல்லு!
சொல்லிக் கொடுத்த பாடம் அனைத்தும்
நெஞ்சில் நிறுத்திக் கொள்ளு—நன்றாய்
நெஞ்சில் பதித்துக் கொள்ளு!

வாயை மூடிச் செவியைத் திறந்து
வகுப்பில் கவனம் கொள்ளு — ஐயம்
வகுப்பில் தீர்த்துக் கொள்ளு!
பாயைப் போட்டுப் படுக்கும் முன்னர்
படித்த பாடம் சொல்லு — நீ
படுக்கும் முன்னர் சொல்லு!

அமைதி கொண்டு அறிவை வென்று
அடங்கி விளக்கம் கேளு — நீ
அன்பாய்ப் பாடம் கேளு!
அமைதி யாக இருக்கும் ஆழி
ஆழம் அதிகம் தானே — கல்வி
ஆழம் வேண்டும் தானே!

தும்பைப் பூவைப் போல வெளுத்துச்
சட்டை போட்டுச் செல்லு — கொக்குச்
சட்டை போட்டுச் செல்லு!
அம்பைப் போலப் பள்ளி நோக்கி
அரிமா இலக்காய்ச் செல்லு — நீ
அறிவால் உலகை வெல்லு!

படிக்கும் பாடம் அன்னை மொழியில்
படிக்க நீயும் விரும்பு — தாய்மொழி
படிப்பு என்றும் கரும்பு!
துடிக்கும் நெஞ்சம் தாய்மொழி காக்கும்
துடிப்பு வேண்டும் உனக்கு — தமிழா!
துடிப்பு வேண்டும் நமக்கு!

*

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண். 8119/63 தென்மொழி.
டி.என்.சீப். பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி

எறும்பின் வேண்டல்

— 'தமிழூர்' தேன்

என்றும்நான் சோர்ந்ததில்லை என்னச் சிறிய
ஏறும்பென்றே இகழ வேண்டாம்
குன்றாகக் குவிந்திருக்கும் குறுநொய்யைத்
தீர்த்துக்கட் டுங்கு றும்பன்

நன்றாகச் செய்துவைத்த நனிசுவையின்
பணியாரம் எள்மு றுக்கு
மென்றுண்ணத் தோதான மெதுவடைதான்
நெய்யுருண்டை மீச்சு வைசேர்

இன்னப்பம் இழையிழையாய்ப் பின்னலிடும்
இடியப்பம் தேங்காய்ப் பாலும்
என்னவகை உணவெனினும் எனக்கொன்றும்
வெறுப்பில்லை எளியே னென்று

முன்னிருந்தே பலர்மொழியக் கேட்டாலும்
முடங்கேன்நான் முயற்சி யோடு
என்னென்ன மூலைமுடுக் கெங்கெல்லாம்
ஏறுதற்குக் கடின மேனும்

திண்ணமுடன் அடைந்திடுவேன் அவ்வாறே
இளந்தமிழீர் தீஞ்சுவை சேர்
அன்னைக்கு மேலான அருமைமிகு
செந்தமிழின் பகையை மாய்த்து

தென்னகத்தில் திசையெங்கும் நிலைப்படுத்தித்
தாய்த்தமிழில் கல்வி கற்கத்
தன்னகத்தே வகைசெய்து தமிழ்நாட்டில்
தமிழாட்சி திளைக்கச் செய்வீர்!

*

தமிழ்ச்சிட்டு

(சிறுவர் கலை இதழ்)

தி.பி. 2032 சுறவம் முதல் புதிய பொலிவுடன்
தனி இதழாக வெளிவருகிறது!

ஆண்டு உறுப்பினர் கட்டணம்	உரு. 30.00
தனி இதழ்	உரு. 3.00
வாழ்நாள் கட்டணம்	உரு. 350.00

தொடர்புக்கு: அமைச்சர், 'தென்மொழி', செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை, சென்னை - 601 302. ✆ 227 0231